தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 80/ந/2024

நாள்.06.12.2024

| | | |
|---|---|---|
| திரு.G.M.கார்த்திகேயன்,<br>விழுப்புரம். | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>விழுப்புரம் நகராட்சி, விழுப்புரம் | – | எதிர்மனுதாரர் |

விழுப்புரம் மாவட்டம், சிங்காரவேலன் தெரு, பூந்தோட்டம், ராமுநகர், கதவு எண்.694 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.M.கார்த்திகேயன் என்பவரின் 27.01.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.01.2024 அன்று பெறப்பட்டு, 80/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விழுப்புரம் மாவட்டம், சிங்காரவேலன் தெரு, பூந்தோட்டம், ராமுநகர், கதவு எண்.694 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.G.M.கார்த்திகேயன் என்பவர் தனது 27.01.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"I trust this letter finds you in good health. I am writing to bring to your attention the persistent issue I have been facing concerning the installation of an underground drainage system in Ramu Nagar, Singaravelan Street, Villupuram – 605 602. I have previously corresponded with the Chairman of Villupuram Municipality, the Commissioner of Villupuram Municipality, and the Villupuram District Collector through initial, first reminder, second reminder and third reminder letters dated 21.11.2023, 05.12.2023. 27.12.2023 and 11.01.2024, respectively.

As a resident of Ramu Nagar and an active participant in community affairs, I have witnessed the challenges posed by the existing drainage infrastructure. Despite

my repeated attempts to seek attention and response from the concerned authorities, I have not received a single acknowledgement or response to any of my letters.

The issues faced by the residents of Ramu Nagar, including water logging and drainage inefficiencies during heavy rainfall, persist without resolution. The lack of communication and action from the municipal authorities has left us in a state of uncertainity and discomfort.

Given the urgency of the matter and the lack of responsiveness from the Chairman of Villupuram Municipality, the Commissioner of Villupuram Municipality, and the Villupuram District Collector, I am turning to your office with the hope that you can intervene and facilitate a prompt and effective resolution to this concern.

I kindly request your office to inquire about the status of my previous letters and the progress, if any, made towards addressing the need for a new underground drainage system in Ramu Nagar. The installation of an efficient drainage system is crucial for the well-being and development of our neighborhood, and the lack of attention to this matter is causing significant inconvenience to the residents.

I appreciate your prompt attention to this matter and look forward to your intervention in ensuring that the concerns raised in my previous letters are addressed in a timely and effective manner. I am hopeful that your office will play a crucial role in bringing about the necessary changes for the benefit of the residents of Ramu Nagar. Singaravelan Street, Punthottam, Villupuram – 605 602.

Thank you for your time and consideration. Thank you for immediate attention to this matter.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து விழுப்புரம் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 12.08.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. விழுப்புரம் நகராட்சி ஆணையர் தனது 13.09.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

" விழுப்புரம் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள சாலாமேடு, வழுதரெட்டி, பாணாம்பட்டு, கா.குப்பம் மற்றும் எருமணந்தாங்கல் ஆகிய 5 ஊராட்சி பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் ரூ.263.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு அரசாணை (நிலை) எண்.01, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறை(நிதி–3(2)) நாள். 03.01.2020–ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நகரரட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து பகுதிகள் மற்றும் ஏற்கனவே பழைய நகராட்சிக்குட்பட்ட (Existing Town) பகுதிகளில் விடுபட்ட பகுதிகளிலும்

பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தக்கோரி பல்வேறு தரப்பினரிடமிருந்து கோரிக்கைகள் நகராட்சிக்கு வரப்பெற்றும், விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் போது புதியதாக இணைக்கப்பட்ட கிராம பகுதிகளில் சாலைகள், தெருக்கள், சந்துக்கள் விடுபட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு புகார் சென்றதை தொடர்ந்து 31.05.2024 அன்று நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களால் இந்நகராட்சியின் வார்டு எண்கள்.01,03,04,05,07,16,17,24,25,26,27,30,35,39 ஆகிய பகுதிகளில் நேராய்வு செய்து புதியதாக இணைக்கப்பட்ட பல பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் விடுபட்டதையும் மற்றும் பழைய நகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் விடுபட்டுள்ளதால் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் நலன் கருதி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும், மேலும் திரு.G.M.கார்த்திகேயன் அவர்கள் மனுவில் கோரியுள்ள பூந்தோட்டம் பகுதி நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளதால் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த வேண்டியது அவசியமானது என ஆய்வு அறிக்கை வழங்கியதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் விழுப்புரம் நகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்ட ஐந்து கிராம பகுதிகள் மற்றும் பழைய நகராட்சி பகுதிகளில் விடுபட்ட பகுதிளான நகராட்சியில் வார்டு எண்கள். 01,03,04,05,07,16,17,24,25,26,27,30,35, மற்றும் 39 ஆகிய வார்டுகளில் அட்டவணையில் கண்டுள்ள விபரப்படி உள்ள தெருக்களுக்கு பொதுமக்கள் நலன் கருதி பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.14378/2024/இர1 நாள்.07.06.2024–ல் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்நிலையில் நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (கி.கு.தி.கோட்டம்) விழுப்புரம் அவர்களது கடிதஎண். 2224/கோ.வி.பா.சா.தி/இவஅ/கி.கு.தி/விழு/2024, நாள்.22.08.2024–ல் ரூ.7.45 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகராட்சி ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.7907/2017/இ3, நாள்.10.09.2024–ல் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திடவும், STP site மாற்றுவதன் காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினங்களுக்கும் அனுமதி வழங்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் மனுதாரர் கோரிக்கையின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான விழுப்புரம் நகராட்சி ஆணையர் ஆகியோரை 04.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 01.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.G.M.கார்த்திகேயன்04.11.2024 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

சரஸ்வதி அவென்யு, ராமு நகர், சிங்காரவேலன் தெருவிற்கு மழைநீர் வடிகால் வசதி, மற்றும் பாதாள சாக்கடை வசதி ஏதும் பலமுறை நகராட்சியிடம் மனு கொடுத்தும் செய்யப்படவில்லை. வடிகால் பணி நடைபெறும் போது சாலையின் இருபுறமும் வடிகால் வசதி செய்து கொடுப்பதில்லை. இதனால் சாலைகள் பழுதடைகின்றன. விழுப்புரம் நகராட்சியில் நிர்வாக சீர்கேடுகள் நிறைந்து காணப்படுவதால், விசாரணை கமிஷன் அமைக்கப்பட வேண்டும். நகர் தோன்றிய ஆரம்ப காலம் முதலே மழைநீர் வடிகால் வசதி, பாதாள சாக்கடை வசதி செய்து தராமல், விழுப்புரம் நகராட்சியால் வரி வசூல் செய்யப்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பலமுறை விண்ணப்பித்தும் இதுவரை ஏதும் பதில் தரப்படவில்லை. TWAD நடத்திய அளவீட்டில் எங்களது தெரு விடுபட்டதனால் தான் கழிவு நீர் வடிகால் அமைக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.ஆனால் நகராட்சியினால் செய்யப்பட வேண்டும் என TWAD –ல் தெரிவித்துள்ளனர். வாய்க்கால் அமைக்கப்பட வேண்டிய பகுதிகள் குறித்த பட்டியலினை சமர்ப்பிப்பது நகராட்சியின் கடமையாகும். அவ்வாறு சமர்ப்பிக்காததால் நகராட்சி அலுவலர்கள் தங்கள் பணியை சரிவர மேற்கொள்ளவில்லை என்று புலனாகிறது.

- Requesting underground drainage to Ramu Nagar, Singaravelan street at the earliest.
- Requesting to frame enquiry committee against the mal administration of Villupuram Municipality.
- Requesting clearance certificate for Ramu Nagar from Fire Safety Department.
- Requesting proper road facility to Ramu Nagar and its connecting streets.

மேலும் எனது புகார் மனுக்களில் தெரிவித்துள்ள விவரங்களையும் மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

6) விழுப்புரம் நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சிஉதவிப்பொறியாளர் 04.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை தெரிவித்துள்ளார்.

மனுதாரர் கோரியுள்ள பாதாள சாக்கடை திட்டம், விடுபட்ட பகுதியான சிங்காரவேலன் தெரு, ராமு நகர், சிங்கரலவேலன் முதல் மற்றும் இரண்டாம் குறுக்குத்தெருக்களில் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்திற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த 1.2 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய் அமைக்கவும் தற்பொழுது நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை குழாய் உடன் இணைக்க விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.3.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த கடிதம் வரப்பெற்றுள்ளது. தற்பொழுது நகராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததாலும், அரசு திட்ட நிதியில் இருந்து நிதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் வரும் நகர்மன்ற கூட்டத்தொடரில் வைக்கப்பட்டு

ஒப்புதல் பெறப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

- வடிகால் வசதிகள் மற்றும் சாலை வசதி செய்ய பாதாள சாக்கடை பணி முடிந்த பின்னர் மேற்கண்ட பணி செய்ய வேண்டியுள்ளதாலும், மேலும் நகராட்சியில் நிதி பற்றாகுறையின் காரணமாக மேற்படி வசதிகள் செய்து தர இயலவில்லை.
- வரும் நகர் மன்ற கூட்டத்தில் மேற்படி பணிகள் தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இன்னும் மூன்று மாத காலத்திற்குள் மழைநீர் வடிகால், மற்றும் பாதாள சாக்கடை வசதி ஆகியவை செய்து முடிக்கப்படும்.
- சாலையின் இருபுறமும் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.
- வடிகால் வசதி செய்து கொடுத்த பின்னர் தான் நகராட்சியால் வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.
- நகராட்சியில் நிதி பற்றாகுறையின் காரணமாகவே பணிகளில் தொய்வு ஏற்பட்டதேயொழிய, நிர்வாக சீர்கேடுகள் ஏதும் இதில் நடைபெறவில்லை.
- மேற்கண்ட பணிகள் உள்ளடக்கிய பணிகளுக்காக கடந்த 10.09.2024 அன்று ரூ.40.73 கோடி நிதி கேட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், விழுப்புரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆவணங்கள், மற்றும் விழுப்புரம் நகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தான் வசித்து வரும் சரஸ்வதி அவென்யு, ராமு நகர், சிங்காரவேலன் தெருவில் மழைநீர் வடிகால் வசதி மற்றும் பாதாள சாக்கடை வசதி செய்து தரக்கோரி பலமுறை விழுப்புரம் நகராட்சியில் விண்ணப்பித்து நகராட்சியினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், வடிகால் பணி நடைபெறும்போது சாலையின் இருபுறமும் வடிகால் வசதி செய்து கொடுப்பதில்லை எனவும், விழுப்புரம் நகராட்சியில் நிர்வாக சீர்கேடுகள் நிறைந்து காணப்படுவதால் உரிய நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

மேலும் குறிப்பாக ராமு நகர், சிங்காரவேலன் தெருவிற்கு பாதாள சாக்கடை வசதி செய்து தரவேண்டும் என்றும், நகராட்சி அலுவலர்கள் மீது நிர்வாக சீர்கேடுகள் குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும், பாதுகாப்புத்துறையினரால் வழங்கப்படும் சான்றிதழ் ராமு நகருக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் மற்றும் ராமு நகருக்கு சாலை வசதிகள் அமைத்து தரவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனுதாரர் கோரியுள்ள பாதாள சாக்கடை திட்டம், விடுபட்ட பகுதியான சிங்காரவேலன் தெரு, ராமு நகர், சிங்காரவேலன் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு தெருக்களில் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்திற்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு மேற்கண்ட பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த 1.2 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை குழாய்

அமைக்கவும் தற்பொழுது நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை குழாய் உடன் இணைக்க விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.3.00 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த கடிதம் நகராட்சிக்கு வரப்பெற்றுள்ளது என்றும் நகராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால், அரசு திட்ட நிதியில் இருந்து நிதி பெற நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டு, அவை நகர்மன்ற கூட்டத்தொடரில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு மூன்று மாத காலத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நகராட்சி உதவிப்பொறியாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

விழுப்புரம் நகராட்சி ஆணையர் தனது அறிக்கை மற்றும் நகராட்சி உதவிப்பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு தமிழக அரசு விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி, மனுதாரரின் கோரிக்கை மீது மூன்று மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து, அது குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு விழுப்புரம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 06–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.G.M.கார்த்திகேயன்,
ஸொழி சாப்ட்வேர் சொலுசன்ஸ் லிட்,
694, ராமு நகர், சிங்காரவேலன் தெரு,
பூந்தோட்டம்,
விழுப்புரம் – 605 602.

2)நகராட்சி ஆணையர்,
விழுப்புரம் நகராட்சி,
விழுப்புரம்.
விழுப்புரம் மாவட்டம்.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)